தமிழ்த் தேசிய

செங்கொடி

அரசியலை ஆணையில் வையுங்கள் –மாவோ

ஜனவரி–2020 (தனிச்சுற்றுக்கு மட்டும்) விலை ரூ.10/–

இஸ்லாமியர்கள் மற்றும் ஏழை, எளிய மக்களின் குடியுரிமையை பறிக்கும் சட்டத்திருத்தம்

தீர்வு என்ன?

கடந்த 1997 ஆம் ஆண்டு நடந்த ஆண்டிமடம் காவல் நிலைய தாக்குதல் (234/1997) வழக்கில் தமிழ்த்தேசியப் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் தோழர் கலை உள்ளிட்ட தமிழ்நாடு விடுதலைப் படை தோழர்கள் 11 பேருக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனையும், ரூபாய் 6500 அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கியுள்ளது பூந்தமல்லி தடா நீதிமன்றம்.

மேற்கண்ட வழக்கில் தண்டனை விதிக்கப்பட்டுள்ள தோழர்களின் விவரம் பின்வருமாறு:

1.வெங்கடேசன்

2.கலை (எ) ரவிச்சந்திரன்

3.மாறன் (எ) செங்குட்டுவன்

4.பொன்னிவளவன்

5.நடராஜன்

6.நாகராஜ்

7.சுந்தரமூர்த்தி

8.முருகையன்

9.சேகர்

10.ஜெயச்சந்திரன்

11.பீட்டர்.

தோழர்களின் விடுதலைக்கு துணைநிற்போம்.

தலைமுறை:2 இதழ்:1

ஆசிரியர்: சுவை.முருகேசன்

முகவரி: தமிழ்த்தேசியச் செங்கொடி, வடக்கு ரத வீதி, இராஜா திரையரங்கம் அருகில், பெண்ணாடம், திட்டக்குடி (வட்டம்), கடலூர் (மாவட்டம்)606 105.

95247 09860

tnsenkodi

tnsenkodi.blogspot.in

தூங்கும்போது வருவது கனவல்ல

உன்னை தூங்கவிடாமல் செய்வதே கனவு. –அப்துல் கலாம்

2020ல் இந்தியா வல்லரசாக மாற வேண்டுமென்று ஆர்.எஸ்.எஸ்ஸின் ஆகச்சிறந்த அடிமையான அப்துல்கலாம் கனவு கண்டார். அன்று அவர் கண்ட கொடுங்கனவு இன்று இந்தியாவில் உள்ள பெரும்பாலான மக்களை தூங்கவிடாமல் துரத்திக்கொண்டிருக்கிறது. இந்தியாவின் ஒவ்வொரு குடிமகனும் "தனது குடியுரிமை எப்போது பறிக்கப்படுமோ ?"என்ற அச்சத்தில் தூக்கத்தை தொலைத்து நிற்கின்றான்.

கடந்த மே மாதம் நடந்த மக்களவை பொதுத் தேர்தலில் இரண்டாவது முறையாக பெரும்பான்மை பலத்துடன் ஆட்சிக்கட்டிலில் அமர்ந்த பா.ஜ.க. கொடுங்கோல் அரசு, 'ஒற்றை இந்தியா' என்ற பெயரில் மக்கள் விரோத சட்டங்களை அவர்கள் மீது அடுக்கடுக்காக திணித்துக் கொண்டே போகின்றது. தனது தீவிர மதவாத பிரச்சாரத்தாலும், ஏகாதிபத்தியங்களுடனான கூட்டணியாலும் பாராளுமன்றம் மட்டுமின்றி உச்சநீதிமன்றம், இராணுவம், காவல்துறை, செய்தி மற்றும் ஊடகம் உள்ளிட்ட அனைத்து துறைகளையுமே கைப்பற்றி தனது 'இந்து ராஷ்டிர' கனவை நோக்கி வெற்றிநடைபோடுகின்றது. அதற்கான ஏணிப் படிகளாய் என்.ஐ.ஏ சட்டத்தில் திருத்தத்தைக் கொண்டு வந்து அப்பாவி இஸ்லாமியர்களை பயங்கரவாதிகள் என கைது செய்தது. தனிநாடு கேட்டுப் போராடிய காஷ்மீரை இரண்டாக உடைத்து, காஷ்மீர் மக்களின் உரிமையான சட்டப்பிரிவு 370, 35ஏ ஆகியவற்றை நீக்கியது. பாபர் மசூதி தீர்ப்பில் 'இடித்தவனுக்கே நிலம் சொந்தம்' என்ற வரலாற்றுக்கேவலம் வாய்ந்த தீர்ப்பை வழங்கியது

பாராளுமன்றத்தில் குடியுரிமைத் திருத்த மசோதாவை அறிமுகப்படுத்தும் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா

அப்படி அவர்களின் ‘இந்து ராஷ்டிர’ கனவுலகத்திற்கு செல்லும் அடுத்த படிகல்லாக ‘1955 குடியுரிமை சட்டத்தில்’ திருத்தத்தைக் கொண்டு வந்துள்ளது பா.ஜ.க அரசு. ஏற்கனவே கடந்த ஜனவரி மாதமே மக்களவையில் நிறைவேற்றப்பட்ட ‘1955 குடியுரிமைச் சட்டத்திருத்த மசோதா’, மாநிலங்களவையில் பா.ஜ.கவுக்கு போதிய பலமின்மையால் நிறைவேற்ற முடியாமல் போனது. அதனை தற்போது தனது மக்கள் விரோத கூட்டணிக் கட்சிகளான அ.தி.மு.க மற்றும் பா.ம.க.வின் ஆதரவுடன் நிறைவேற்றியுள்ளது.

1955 குடியுரிமைச் சட்டம்

இரண்டாம் உலகப்போரால் ஏற்பட்ட நெருக்கடியின் காரணமாக 1947ல் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்திய துணைக் கண்டத்தை விட்டு வெளியேற முடிவு செய்தது. அதுவரை பிரிட்டிஷாரின் காலனியாக இருந்த இந்திய துணைகண்டம், பிரிட்டிஷாரின் சுரண்டலை தொடர்ந்து நீடிப்பதற்கு வசதியாக, மதத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தியா, பாகிஸ்தான் என இரு நாடுகளாக பிரிக்கப்பட்டது. அந்தந்த நாட்டின் தரகு முதலாளிகளிடமும் அதிகாரத்தை கைமாற்றியது பிரிட்டிஷ் அரசு. துணைக்கண்டம் இரண்டாக பிரிக்கப்பட்டதையடுத்து இந்தியாவிலிருந்த இஸ்லாமியர்களும், பாகிஸ்தானில் இருந்த இந்துக்களும் தாக்கப்பட்டனர். எல்லையோரப் பகுதிகளில் மதக்கலவரங்கள் தலைவிரித்தாடின. அங்கும் இங்குமாக மொத்தம் 1.76 கோடி மக்கள்

இடம்பெயர்ந்தனர். 30 லட்சத்திற்கும் மேற்பட்டோர் மதக்கலவரங்களில் கொல்லப்பட்டனர். வரலாறு காணாத இந்த இடப்பெயர்வினால், இந்தியாவில் இருந்து பாகிஸ்தான் சென்ற இஸ்லாமியர்களும், பாகிஸ்தானிலிருந்து இந்தியா வந்த இந்துக்களும் குடியுரிமை அற்றவர்களாக இருந்தனர். அவர்களுக்கு குடியுரிமை வழங்கும் பொருட்டு ‘1955ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டம்’ உருவாக்கப்பட்டது. அச்சட்டத்தின்படி, இந்தியாவில் குடியேறி 12 ஆண்டுகள் வாழ்ந்து வந்தவர்களுக்கு குடியுரிமை உறுதி செய்யப்பட்டது. இச்சட்டத்தின்படிதான் முன்னாள் இந்திய பிரதமர் மன்மோகன்சிங், முன்னாள் துணை பிரதமர் எல்.கே.அத்வானி போன்றோர் இந்தியாவில் குடியுரிமை பெற்றனர். அந்த சட்டத்தில்தான் தற்போது திருத்தத்தைக் கொண்டு வந்துள்ளது பா.ஜ.க அரசு.

சட்டத்திருத்தம்

1955 சட்டத்தின்படி, இந்தியாவிற்கு அகதியாக வந்து 12 ஆண்டுகள் வாழ்ந்தவர்களுக்கு குடியுரிமை என்ற நிலையை மாற்றி, (எந்த ஆவணங்களும் இல்லை என்றாலும்) இந்தியாவில் குடியேறி 5 ஆண்டுகள் வாழ்ந்தால் போதும் அவர்களுக்கு குடியுரிமை வழங்கப்படும் என கூறப்பட்டுள்ளது. ஆனால் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய மூன்று நாடுகளில் இருந்து குடியேறிய இந்துக்கள், சீக்கியர்கள், பவுத்தர்கள், சமணர்கள் மற்றும் கிருத்துவர்கள் ஆகிய ஆறு மதத்தைச் சார்ந்தவர்களுக்கு மட்டுமே குடியுரிமை அளிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் இஸ்லாமியர்கள் திட்டமிட்டே புறக்கணிக்கப்பட்டுள்ளனர். மேலும் இந்தியாவின் அண்டை நாடுகளான இலங்கை, பர்மா, பூட்டான் போன்ற நாடுகளிலிருந்து குடியேறிய அனைத்து மக்களுக்கும் குடியுரிமை மறுக்கப்பட்டுள்ளது.

போராட்டம்

உள்துறை அமைச்சர் அமித்ஷா மக்களவையில் ‘குடியுரிமை சட்டத் திருத்த மசோதா’வை அறிமுகப்படுத்தியவுடன் அதற்கு எதிராக வடகிழக்கு பகுதிகளான அஸ்ஸாம், மேகாலயா, அருணாச்சல பிரதேசம், மற்றும் திரிபுரா ஆகிய பகுதிகளை சேர்ந்த மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு தங்களது எதிர்ப்பை பதிவு செய்தனர். பின்னர் இப்போராட்டம் இந்திய துணைக்கண்டம் முழுவதும் பரவியது. பல்வேறு முற்போக்கு இயக்கங்கள், மாணவர்கள், சமூக ஆர்வலர்கள் என அனைத்துத் தரப்பினருமே இச்சட்டத்தை திரும்பப் பெறக்கோரி போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

டெல்லியில் உள்ள ஜாமியா இஸ்லாமியா பல்கலைக்கழக மாணவர்கள் அமைதியாக நடத்திய போராட்டத்தை கலைக்க, கல்லூரி வளாகத்தினுள் நுழைந்த ஆர்.ஏ.எப் படை பல்கலைக்கழக மாணவர்கள் மீது கண்ணீர் புகை குண்டுகளை வீசி, தடியடி நடத்தியது. அப்போதும் மாணவர்களை கலைக்க முடியாததால் அவர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தியது. காவல்துறையின் இந்த மிருகத்தனமான தாக்குதலில்

200க்கும் மேற்பட்ட மாணவர்கள் காயமடைந்தனர். அன்றிரவு 100க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு காவல் நிலையத்தில் வைக்கப்பட்டனர். பல்கலைக்கழக விடுதிக்குள் நுழைந்த காவல்துறை காஷ்மீரி மாணவர்களை மட்டும் தேடித்தேடி தாக்குதலை நடத்தியது.

ஜாமியா இஸ்லாமியா பலக்லைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டபோது

ஜாமியா இஸ்லாமியா பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்பட்டதையடுத்து இந்திய துணைகண்டம் முழுவதற்கும் போராட்டம் முழுவீச்சாக பரவியது. இந்தியாவெங்கும் உள்ள கல்லூரி மாணவர்கள் வகுப்புகளை புறக்கணித்து போராட்டத்தில் இறங்கியுள்ளனர். அவர்களுக்கு ஆதரவாக மக்களும் கட்சிகளும் போராட்டத்தில் இறங்கியுள்ளதால் வீதிகள் யாவும் போர்க்கோலம் பூண்டுள்ளது. இவற்றை ஒழிக்க காவல்துறையை ஏவி துப்பாக்கிச் சூடு நடத்தி போராட்டத்தை கலைக்க முயன்று கொண்டிருக்கிறது இந்திய ஆளும் வர்க்கம். இதுவரை 27 பேர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். அதில் 3 பேர் சிறுவர்களாவர். மேலும் லட்சக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர். ஆயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆனாலும் ஆளும் வர்க்கத்திற்கு அஞ்சாமல் மக்கள் தொடர்ந்து பல்வேறு வகைகளில் தங்களது எதிப்பை வெளிக்காட்டி போராடிக் கொண்டிருக்கின்றனர்.

அஸ்ஸாமியர்கள் போராடுவது ஏன்?

1947ல் மத ரீதியாக இந்தியத் துணைக்கண்டம் பிரிக்கப்பட்டபோதும் பின்னர் 1971ல் வங்கதேச விடுதலைப் போராட்டத்தின் போதும் பங்களாதேஷை சேர்ந்த மக்கள் மேற்கு வங்கம் மற்றும் வடகிழக்கு பகுதியில் அகதிகளாக குடியேறினர். வளர்ச்சியடைந்த சமூகத்தின் பிரதிநிதிகளான வங்காளிகள் பெரும்பாலும் பழங்குடி மக்களைக் கொண்ட வடகிழக்குப் பகுதிகளில் குடியேறியதால், வங்காளிகளே பெரும்பாலும் அரசு வேலைகளிலும் வியாபாரத்திலும் கோலோச்சினர். வங்காளிகளால் தங்களது அரசியல், பொருளாதார மற்றும் கலாச்சார உரிமைகள் பாதிக்கப்படுவதாக அஸ்ஸாமியர்கள் போராட்டத்தில் இறங்கினர். அஸ்ஸாமை விட்டு வங்காளிகளை வெளியேற்றக் கோரி எழுபதுகளின் இறுதியில் தொடங்கி ஆறாண்டுகள் நடத்தப்பட்ட போராட்டத்தின் விளைவாக 1985இல் அஸ்ஸாம் மாணவர்கள் அமைப்பிற்கும் அன்றைய ராஜீவ் காந்தி அரசுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இது ‘அஸ்ஸாம் உடன்படிக்கை’ என்று அழைக்கப்படுகிறது. இதன்படி “1971 மார்ச் 24ஆம் தேதிக்கு பிறகு அசாமில் குடியேறியவர்கள் அனைவரும் அந்நியர்களாக கருதப்பட்டு அஸ்ஸாமைவிட்டு வெளியேற்றப்படுவர்” என்ற வாக்குறுதியை இந்தியா வழங்கியது.

‘எப்போதுமே வாக்குறுதிகளை நிறைவேற்றும் பழக்கமில்லாத இந்திய அரசு’ இந்த வாக்குறுதியையும் நிறைவேற்றவில்லை. பொறுத்திருந்து பார்த்த அஸ்ஸாமியர்கள் 2010ல் குடிமக்கள் பதிவேட்டிற்கு எதிராக மீண்டும் போராட்டம் நடத்தினர். ‘அஸ்ஸாம் உடன்படிக்கை’யை நிறைவேற்றக்கோரி உச்சநீதிமன்றத்தில் வழக்கும் தொடரப்பட்டது. என்.ஆர்.சி. கணக்கெடுப்பின் மூலம் அஸ்ஸாமில் உள்ள அந்நியர்களை வெளியேற்றுமாறு உச்சநீதிமன்றம் 2013ல் உத்தரவிட்டது.

உச்சநீதிமன்றம் ‘1955 இந்திய குடியுரிமைச் சட்டம்’ மற்றும் அடையாள அட்டைக்கான ‘குடியுரிமை சட்டத் திருத்தம் 2003’ ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே அசாமில் என்.ஆர்.சி எடுப்பதற்கான உத்தரவை பிறப்பித்தது. தற்போது இத்தீர்ப்புக்கு அடிப்படையான ‘1955 குடியுரிமை சட்டத்தில்’ திருத்தம் கொண்டு வந்து அஸ்ஸாமில் குடியேறிய வங்காள இந்துக்களை நிரந்தர குடிமக்களாக்க திட்டமிட்டுள்ளது இந்திய அரசு. என்.ஆர்.சி கணக்கெடுப்பின்படி அஸ்ஸாமில் உள்ள அந்நியர்கள் என சுட்டப்படும் 19லட்சம் பேரில் 7லட்சம் பேர் இஸ்லாமியர்களாவர். அவர்களை தவிர மீதமுள்ள மற்ற மதத்தினர் 12லட்சம் பேருக்கு

இச்சட்டம் குடியுரிமையை அளிக்கிறது.இதனால்தான் அஸ்ஸாமியர்கள் இச்சட்ட திருத்தத்திற்கு எதிராக போராடுகின்றனர்.

அஸ்ஸாமியர்களுக்கு இந்துக்கள், இஸ்லாமியர்கள் என்ற மத பேதமெல்லாம் இல்லை. அவர்களை பொறுத்தவரை “ஆக்கிரமிப்பாளர்கள் அனைவரும் தங்களது தேசத்தை விட்டு வெளியேற்றப்பட வேண்டும்”. ஆனால் தற்போது கொண்டுவந்துள்ள இச்சட்டத்தின்படி இஸ்லாமியர்கள் தவிர மற்ற அனைத்து வங்காளிகளுக்கும் அஸ்ஸாமில் குடியுரிமையை வழங்குவதால், அவர்கள் இச்சட்டத்தை எதிர்க்கின்றனர். அதனை திரும்பப்பெறக்கோரி போராடுகின்றனர். அஸ்ஸாமியர்கள் மட்டுமின்றி வடகிழக்கிலுள்ள அனைத்து பூர்வகுடி மக்களின் கோரிக்கையும் இதுவேயாகும்.

பிற பகுதி மக்கள் எதற்காக போராடுகிறார்கள்?

வடகிழக்கு பகுதிகள் தவிர, மேற்கு வங்கம் உள்ளிட்ட இந்தியாவின் பிற பகுதியைச் சேர்ந்த மக்களும் இச்சட்டத்தை திரும்பப் பெறக்கோரி போராட்டத்தை நடத்துகிறார்கள். ஆனால் அவர்கள் போராடுவதற்கான காரணம் வடகிழக்கு மக்களின் கோரிக்கையை போலவே ‘அந்நியர்களை வெளியேற்ற வேண்டும் என்பதல்ல’.

பா.ஜ.க அரசு தனது கனவு திட்டமான இந்து ராஷ்டிரத்தை உருவாக்குவதற்காக இஸ்லாமியர்களை குடியுரிமை அற்ற அகதிகளாக்கும் வேலையை



இச்சட்டத்திருத்தத்தின் மூலம் நயவஞ்சகமாக செய்து முடித்துள்ளது. இதனால் படிப்பறிவற்ற ஏழை மக்களும் இஸ்லாமியர்களும் குடியுரிமை பறிக்கப்பட்டு தடுப்பு முகாம்களில் அடைக்கப்படுவதற்கான அனைத்து வாய்ப்புகளும் உள்ளன. ஏற்கனவே முன்னாள் குடியரசு தலைவர் பக்ருதீன் அலியின் குடும்பத்தினரின் பெயர்கள் தேசிய குடிமக்கள் பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. முன்னாள் குடியரசு தலைவருக்கே இந்த நிலை என்றால் சாதாரண இஸ்லாமிய குடிமக்களின் நிலையை என்னவென்று சொல்வது. அதனால்தான் இச்சட்டத்திருத்தத்தை திரும்பப் பெறக்கோரி இந்தியாவின் மற்ற பகுதியை சேர்ந்த மக்கள் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

மேலும் பாகிஸ்தானிலிருந்தும் பங்களாதேஷிலிருந்தும் இந்தியாவிற்கு அகதிகளாக வந்த ஷியாக்கள் மற்றும் அகமதியாக்கள், இலங்கையிலிருந்து ஈழப் போராட்ட காலகட்டத்தில் அகதிகளாக வந்த ஈழத் தமிழர்கள், பர்மாவிலிருந்து அகதிகளாக வந்த ரோகிங்கியாக்கள் உட்பட பல்வேறு நாடுகளில் இருந்து அகதிகளாக குடியேறிய அனைத்து மக்களுக்கும் குடியுரிமை வழங்கக்கோரி இவர்கள் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். “குடியுரிமை வழங்கும் விடயத்தில் மத பாகுபாடு காட்டக் கூடாது” என்பதே இவர்களின் பிரதான கோரிக்கையாக உள்ளது.

என்னதான் தீர்வு?

எதிர்வரும் 2021 ஆம் ஆண்டிற்கான மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட இருக்கிறது. மக்கள் தொகை கணக்கெடுப்புக்காக 8,754 கோடி மற்றும் மக்கள் தொகை பதிவேட்டை புதுப்பிக்க 3,941கோடி ரூபாய் நிதியை ஒதுக்கியுள்ளது மத்திய அரசு. இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பில் முறையான ஆவணங்களை தர முடியாதவர்களும் விடுபட்டவர்களும் தடுப்புக் காவல் முகாம்களில் அடைக்கப்படுவர். அநேக இஸ்லாமியர்களின் பெயர்களும் பா.ஜ.க ஆட்சிக்கு எதிரான முற்போக்காளர்களின் பெயரும் இதில் விடுபடத்தான் போகிறது. அப்படி விடுபட்டவர்களை அடைத்துவைக்க கோடிக்கணக்கில் செலவுகள் செய்து தடுப்பு முகாம்கள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. பாகிஸ்தான், வங்கதேசம், ஆப்கானிஸ்தான் ஆகிய 3 நாடுகளில் இருந்து இந்தியாவிற்கு அகதிகளாக வந்த இந்துக்கள், பார்சிகள், பௌத்தர்கள், சீக்கியர்கள், சமணர்கள் மற்றும் கிருத்துவர்கள் ஆகிய மதங்களை சேர்ந்தவர்கள் என்றால் அவர்கள் முகாமிலிருந்து விடுவிக்கப்பட்டு அவர்களுக்கு குடியுரிமை வழங்கப்படும். அதற்கு அவர்கள் எந்தவித முறையான ஆவணங்களும் வைத்திருக்க வேண்டிய தேவையில்லை ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில்

குடியேறியவர்களாக இருந்தால் மட்டுமே போதுமானது.

இவை அல்லாதவர்கள் (அதாவது இஸ்லாமியர்கள்), அவர்கள் இந்தியர்களாகவே இருந்தாலும் சரி தங்களது குடியுரிமையை நிரூபிக்கும் வரை தடுப்பு முகாம்களிலேயே இருக்கவேண்டும். இப்படித்தான் இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட இருக்கிறது.

அஸ்ஸாமில் தனது குடியுரிமை நிரூபிக்க இலட்சக்கணக்கான மக்கள் பணத்தையும் வாழ்நாளையும் செலவு செய்து அலைந்து கொண்டிருக்கிறார்கள். பெயர் மாற்றத்தால் மதுபாலா மண்டல் என்ற முதியவர் கடந்த 2016-ம் ஆண்டு கைது செய்யப்பட்டு மூன்றாண்டுகள் சிறையிலேயே இருந்தார். தனது தள்ளாடும் வயதில் இப்பெண்மணி குடியுரிமையை நிரூபிக்க மூன்றாண்டுகள் அலைக்கழிக்கப்பட்டு தற்போதுதான் விடுவிக்கப்பட்டுள்ளார். இவருக்கு நேர்ந்த அவலம் நமக்கும் நமது பக்கத்து வீட்டுக்காரர்களுக்கும் நடக்காமல் இருக்கும் என்பதற்கு எந்தவித உத்திரவாதமும் இல்லை.

பெயர் மாற்றத்தால் கைது 3 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்ட மதுபாலா மண்டல்

தங்களது சொந்த நாட்டில் உயிர்வாழ வாய்ப்பற்றவர்கள்தான் தங்களது உடமைகளையும் உறவுகளையும் விட்டு அகதிகளாக பிற நாட்டில் குடியேறுகின்றனர். அப்படியான அகதிகள் படும் துன்பங்களை தமிழர்களுக்கு சொல்லித் தெரிய வேண்டியதில்லை. சிங்கள பேரினவாதத்தால் ஒடுக்கப்பட்டு அதற்கு எதிராக தமிழீழ விடுதலை கோரி போராடிய ஈழத் தமிழ் மக்கள் எழுபதுகளில் இருந்து 2009 வரை இந்தியாவிற்கு அகதிகளாக வந்துள்ளனர். அப்படி வந்தவர்கள் இங்கேயே வளர்ந்து, படித்து, பணியாற்றி வருகின்றனர் அவர்களுக்கு இன்றளவும் இங்கே குடியுரிமை வழங்கப்படவில்லை. இந்தியாவில் குடியுரிமை வழங்கப்படாததால் தங்களது உயிரை பணயம் வைத்து படகுகளின் மூலம் பல்வேறு

நாடுகளுக்கு தப்பிச் சென்று, அங்கே அகதிகளாக சிலகாலம் வாழ்ந்து பின்னர் அந்த நாட்டின் குடியுரிமையை பெறுகின்றனர் ஈழத்தமிழர்கள்.

பாகிஸ்தானை பொருத்தவரை இந்துக்கள் எப்படி நடத்தப்படுகிறார்களோ அப்படித்தான் இஸ்லாமியர்களில் உள்ள பிரிவுகளான அகமதியாக்களும், ஷியாக்களும் ஒடுக்கப்படுகின்றனர். அவர்கள் பல்வேறு நாடுகளுக்கு அகதிகளாக குடியேறுகின்றனர். பர்மாவில் 1982ல் இதே போன்ற ஒரு குடியுரிமை சட்டத்தை உருவாக்கி 'அரக்கன் தேசிய விடுதலை'க்கு போராடிக் கொண்டிருந்த ரோஹிங்கிய முஸ்லிம்களின் குடியுரிமையை பறித்து அவர்களை நாடற்றவர்களாக ஆக்கியது பர்மிய அரசு.

குடிபெயரும் ரோஹிங்கிய அகதிகள்

வஜ்ராயன மகாயான புத்த மதத்தை தனது அரசு மதமாக கொண்ட பூட்டானில் இருந்து பல்வேறு கிறித்தவர்கள் அகதிகளாக வெளியேறியுள்ளனர். ஆனால் இவர்களுக்கெல்லாம் உயிர் வாழ்வதற்கான அடிப்படை உரிமையை (குடியுரிமையை) வழங்க மறுக்கின்றது இந்திய அரசு. இவர்களையும் இங்கிருக்கும் இஸ்லாமியர்களையும் "ஆடுமாடுகளை பட்டியில் அடைப்பதைப் போல்" தடுப்பு முகாம்களில் அடைத்து புதிய வகை சேரிகளை உருவாக்க துடித்துக் கொண்டிருக்கிறார்கள் இந்த பாசிசவாதிகள்.

எந்தவித ஜனநாயக உரிமையுமற்ற ஒரு புதிய வகை உழைக்கும் வர்க்கத்தை கட்டியமைக்கும் முயற்சியே இது. குடியுரிமை இல்லாதவர்கள் என்பதால்

அவர்களால் சங்கம் அமைக்கவோ, கூலி உயர்வுக்காக போராடுவோ அல்லது தங்களது பிற உரிமைகளுக்காக குரல் கொடுக்கவோ எளிதில் இயலாததாகிவிடும்.

ஆகவே இச்சட்டத்தை எதிர்த்து போராடி இதனை திரும்பப்பெற செய்யவேண்டியது நமது கடமையாகும். ஆனால் இச்சட்டத்தை திரும்பப்பெற செய்தால் மட்டும் போதுமானதா? இதனை திரும்பப்ப்பெற செய்துவிட்டால் குடியுரிமை குறித்த சிக்கல்கள் தீர்ந்து விடுமா?

வடகிழக்கிலுள்ள மக்கள் அங்கு குடியேறியவர்கள் வங்காளிகள் என்பதால் அவர்கள் அனைவரையும் வெளியேற்றக் கோரி போராடுகின்றனர். ஆனால் மேற்கு வங்க மக்களோ தங்களது இனத்தவரான வங்கதேச மக்கள் அனைவருக்குமே மதப் பாகுபாடின்றி குடியுரிமை வழங்கப்பட வேண்டும் என்று போராடுகின்றனர். போராட்டம் இச்சட்ட திருத்தத்தை எதிர்த்துதான் என்றாலும் இருவரின் நோக்கமும் வெவ்வேறானது. அதேபோல் தமிழ்நாட்டைப் பொருத்தவரையில் ஈழ விடுதலை போரின்போது பாதிக்கப்பட்ட தங்களது தொப்புள் கொடி உறவுகளான ஈழத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்க வேண்டும் என்பது தமிழர்களின் நெடுநாள் கோரிக்கையாக உள்ளது.

தேசிய இனங்களின் சிறைக்கூடமான இந்தியாவில் வெவ்வேறு தேசிய இனங்கள், வெவ்வேறான வளர்ச்சி கட்டத்தில் இருப்பதாலும் வெவ்வேறு மொழி, இன, பண்பாடு, வரலாற்றை கொண்டிருப்பதாலும் இத்தகைய முரண்பாடுகள் எழுகின்றன. இந்திய துணைக்கண்டத்திற்கான தீர்வு என்பது பாட்டாளிவர்க்க தலைமையிலான தேசிய விடுதலை போராட்டம் தான் என்றாலும் அதனை அடையும் வரை இம்மக்கள் அகதிகளாகவே வாழ வேண்டுமா என்ன?

எனவே தற்போது நிலவுகின்ற சூழலில் குடியுரிமையை வழங்குவதற்கான அதிகாரம் மாநில அரசுகளுக்கு வழங்கப்படவேண்டும். அப்போதுதான் தமிழீழ உறவுகளுக்கு தமிழ்நாட்டில் குடியுரிமையை வழங்க முடியும். வங்காளிகளுக்கு மேற்கு வங்கத்திலும் சீக்கியர்களுக்கு பஞ்சாபிலும் குடியுரிமை வழங்க முடியும். அதை விடுத்து ஒற்றை சட்டத்தை வைத்துக் கொண்டு ஒட்டு மொத்த இந்தியாவிற்கும் குடியுரிமையை முடிவு செய்வது என்பது இம்மக்களுக்குள்ளேயே முரண்பாடுகளை உண்டாக்கி அவர்களுக்குள் கலவரத்தை மூட்டி வரலாறு காணாத பேரழிவிற்கு இட்டுச் செல்லுமே தவிர, இம்மக்களின் பிரச்சனைகளுக்கு ஒரு போதும் தீர்வை தராது.

அதேபோல் இச்சட்டத்தை திரும்பப் பெறக்கோரி மட்டுமே போராட்டத்தை நடத்துவதென்பது ஏற்கனவே இருக்கும் இந்திய சிறை கூடத்தை மேலும் வலுப்படுத்துவதாகவே அமையும். இச்சட்டத்திற்கு எதிரான போராட்டங்களில் இந்திய மூவண்ணக்கொடி வலுவாக உயர்த்திப் பிடிக்கப்படுகிறது. 'இந்தியாவை காப்போம்', 'இந்திய

அரசியலாம்ப்புச் சட்டத்தைக் காப்போம்' என்பது போன்ற முழக்கங்களும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. இவ்வளவு காலம் இந்திய துணைக்கண்டத்தில் வாழும் அனைத்து தேசிய இன மக்களையும் எந்த சட்டம் ஒடுக்கி வருகிறதோ, எந்த கட்டமைப்பு ஒடுக்கி வருகிறதோ அதனையே காப்போம் என்பதாக போராடும் மக்கள் தவறாக வழி நடத்தப்படுகிறார்கள். இச்சட்டத்திற்கு ஆதரவான வாதங்கள் இந்துத்துவ தேசத்தை உருவாக்க முனைவதை போல இதற்கு எதிரான போராட்டங்களும் காந்திய வழியிலான இந்தியாவை கட்டிக்காக்க முனைகின்றது. இவ்விரு வகையிலான இந்தியாவும் இங்கு வாழும் அனைத்து தேசிய இன மக்களுக்கும் எதிரானதேயாகும். இரண்டுமே இந்தியாவில் உள்ள தேசிய இனங்களின் மீதான சுரண்டலையும் ஒடுக்குமுறைகளையும் அடிப்படையாகக் கொண்டே கட்டப்பட்டுள்ளது. **காங்கிரஸ் இந்திய வல்லாதிக்கத்தின் முகமூடி அணிந்த அழகிய முகம் என்றால் பா.ஜ.க அதன் அப்பட்டமான கோர முகம்.**

எனவே தமிழ்நாட்டின் மக்களாகிய நாம் குடியுரிமை திருத்த சட்டத்தை திரும்பப் பெற கோருவது மட்டுமின்றி குடியுரிமைக்கான அதிகாரத்தை மாநிலப் பட்டியலுக்கு வழங்கக்கோரியும் போராட்டத்தை நடத்த வேண்டும். குடியுரிமை சட்டத்தை திரும்பப்பெற வைப்பது நமது போராட்டத்தின் முதன்மையான நோக்கமாகவும் அதேவேளையில் குடியுரிமையை வழங்குவதற்கான அதிகாரத்தை மாநில பட்டியலுக்கு மாற்றக்கோருதல் நம் போராட்டத்தின் இரண்டாம் நோக்கமாகவும் இருக்க வேண்டும்.

-தோழர் சுவை.முருகேசன்

கெயில் குழாய் திட்டம்
ஊரெங்கும் புதைக்கப்படும் வெடிகுண்டு குழாய்கள்

நாகை, கடலூர் மாவட்டங்களை பெட்ரோ-கெமிக்கல் மண்டலமாக மத்திய அரசு அறிவித்துள்ளது. மேலும் இம்மாவட்டங்களில் ஹைட்ரோ-கார்பன் எடுக்க மூன்று மண்டலங்களுக்கு அனுமதியும் அளித்துள்ளது. இதில் தரைப்பகுதியில் ஹைட்ரோ-கார்பன் எடுக்க ஓ.என்.ஜி.சி.க்கும், ஆழம் குறைந்த கடற்பகுதியில் ஹைட்ரோ-கார்பன் எடுக்க வேதாந்தா நிறுவனத்திற்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் அறிவிக்கப்பட்டதற்கு எதிராக இப்பகுதியை சார்ந்த மக்கள் தங்களது போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இருந்தும் மக்களின் எதிர்ப்பை கொஞ்சம் கூட பொருட்படுத்தாமல் ஓ.என்.ஜி.சி. புதிய எண்ணெய் மற்றும் எரிவாயு கிணறுகளை அமைத்து வருகிறது. மேலும் பல கிணறுகளை அமைக்கவும் இருக்கின்றது.

ஏற்கனவே நாகை மாவட்டதில் செயல்பாட்டில் இருக்கும் ஓ.என்.ஜி.சி. மற்றும் ஹெச்.ஓ.இ.சி. எண்ணெய் கிணறுகளில் இருந்தும், மேலும் அமைக்கப்பட இருக்கும் கிணறுகளில் இருந்தும், எண்ணெய் மற்றும் எரிவாயுக்களை சுத்திகரிப்பு செய்வதற்காக குழாய்கள் மூலம் எடுத்து செல்ல இருக்கின்றனர். இவற்றின் ஒரு பகுதியாக குத்தாலம் ஓ.என்.ஜி.சி.யில் இருந்து (மேமாத்தூர் வழியாக)பிள்ளைப் பெருமாநல்லூர் ஹெச்.ஓ.இ.சி. வரை குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன. மேலும் மேமாத்தூரில் இருந்து பனங்குடியில் உள்ள சி.பி.சி.எல். எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் வரையிலும் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன.

இவற்றின் மேலும் ஒரு அங்கமாகவே தற்போது மாதானம் ஓ.என்.ஜி.சி. முதல் மேமாத்தூர் வரை 29 கிலோ மீட்டர் நீளத்திற்கு தற்போது குழாய்கள் பதிக்கப்படுகின்றன. குத்தாலம்,

பிள்ளைப்பெருமாநல்லூர், மாதானம் உள்ளிட்ட பகுதிகளில் எடுக்கப்பட இருக்கும் எண்ணெய் மற்றும் எரிவாயுக்களை பனங்குடியில் உள்ள சி.பி.சி.எல். எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு செல்வதே இக்குழாய் பதிப்பின் நோக்கமாகும். மேலும் இதுவரை ஒரு ஆண்டிற்கு 1.0 மில்லியன் டன் சுத்திகரிப்பு திறனை கொண்டிருந்த சி.பி.சி.எல். ஆலை தற்போது 35,000 கோடி ரூபாய் முதலீட்டில் ஆண்டிற்கு 10.0 மில்லியன் டன் சுத்திகரிப்பு திறன் கொண்டதாக மாற்றியமைக்கப்படவும் உள்ளது.

அமெரிக்கா போன்ற நாடுகளில் புதைக்கப்பட்டுள்ள இது போன்ற குழாய்களில் இதுவரை 3200க்கும் மேற்பட்ட முறை கசிவுகளால் விபத்து ஏற்பட்டுள்ளன. அங்கெல்லாம் மக்களின் வாழ்விடங்களில் இதுபோன்ற எரிவாயு குழாய்கள் பதிக்க அனுமதி கிடையாது. ஆனால் நம் பகுதியில் பதிக்கப்படும் குழாய்களோ மக்கள் நெருக்கமாக வாழும் பகுதியான விளைநிலங்களுக்கும் வீடுகளுக்கும் அருகிலேயே புதைக்கப்படுகின்றன.

கடந்த 2014 ஆம் ஆண்டு, ஆந்திராவில் உள்ள கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் கெயில் நிறுவனத்தால் புதைக்கப்பட்டிருந்த குழாய்களில் இருந்து எரிவாயு கசிந்து விபத்து ஏற்பட்டது. இதில் 29 அப்பாவி மக்கள் உடல் கருகி உயிரிழந்தனர். அங்கிருந்த வீடுகள், கடைகள் மற்றும் பச்சை மரங்கள் யாவும் தீயில் கருகிச் சாம்பலாகின. அதற்கு தண்டனையாக கெயில் நிறுவனத்திற்கு வெறும் 20 இலட்சம் மட்டுமே அபராதம் விதிக்கப்பட்டது.

இப்போது குழாய்கள் பதிக்கப்படும் நம் பகுதியிலும் ஒவ்வொரு முறை கசிவு ஏற்படும் போதும், இதே போன்றே குழாய்கள் வெடித்து பேரழிவு ஏற்படும். அதற்கு தண்டனையாக இந்த அரசும் கெயில் நிறுவனத்திடமிருந்து சில இலட்சங்களை பெற்றுக்கொண்டு நம்மை காவு கொடுக்கும்.

இத்திட்டத்தை குழாய்கள் செல்லும் நிலத்தின் சொந்தக்காரர்களுக்கு மட்டுமான பிரச்சனையாகக் காட்டி ஏமாற்றுகிறார்கள். ஒருவேளை எரிவாயு கசிவு ஏற்பட்டால், அந்த நிலத்தின் சொந்தக்காரரை மட்டும் கொல்ல போவதில்லை. இப்பகுதியில் வாழும் அனைத்து மக்களையும் சேர்த்தே கொல்லும். நெருப்புக்கு சாதி, மதம், ஏழை- பணக்காரன் என்ற வித்தியாசங்கள் எல்லாம் தெரியாது. எரிக்க மட்டுமே தெரியும். எனவே இது இப்பகுதியில் வாழும் அனைவரின் உயிரை குடிக்கும் பிரச்சனையாகும்.

‘இங்கு வாழும் அனைத்துத் தரப்பு மக்களும் இத்திட்டத்தை எதிர்க்கிறார்கள்’ என்பதை நன்கு தெரிந்தும், இந்த அரசு நம்மீது கட்டாயமாக இத்திட்டத்தை திணிக்கிறது. ஆகையால் வெறும் கோரிக்கையை மட்டுமே வைப்பதால் இந்த திட்டத்தை இரத்து செய்துவிட முடியாது. நாம் அனைவரும் ஒன்று திரண்டு போராடி குழாய் பதிக்க இருப்பதை தடுத்து நிறுத்த வேண்டும். மேலும் பதித்த குழாய்களை அரசை கட்டாயப்படுத்தி அகற்றவேண்டும். இவற்றை நாம் செய்யத் தவறினால், நாமும் ஆந்திராவில் நடந்தது மாதிரியான விபத்துகளின் மூலம் கொல்லப்படுவோம். அப்படியான பேரழிவுகள் நம் பகுதியில் நடக்க கூடாது என்றால் இத்திட்டத்திற்கு எதிராக நாம் ஒன்றிணைந்து போராடுவது மட்டுமே நம் முன் இருக்கும் ஒரே வழி...!

-இரா.தமிழ்வேந்தன்

விளைநிலங்களில் எண்ணெய் மற்றும் எரிவாயு குழாய்கள் பதிப்பதை உடனடியாக நிறுத்து.

இதுவரை பதிக்கப்பட்ட எரிவாயு குழாய்களை உடனடியாக அப்புறப்படுத்து.

காவிரிப் படுகையை பாலைவனமாகும் ஹைட்ரோ-கார்பன் திட்டத்தை கைவிடு.

சி.பி.சி.எல். எண்ணெய் சுத்திகரிப்பு நிலைய விரிவாக்கத்தை தடை செய்.

நாகை, கடலூர் மாவட்டங்களை பெட்ரோ-கெமிக்கல் மண்டலமாக அறிவித்ததை இரத்து செய்.

காவிரிப் படுகையை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்திடு.

இஸ்லாமியர்களுக்கு மட்டும் ஏன் இந்த நிலை?

இந்திய நாடாளுமன்றத்தில் யார் ஆட்சியில் இருந்தாலும் இந்திய வரலாற்றை பதிவு செய்யும்போது 'இஸ்லாமியர் படையெடுப்பு' என்று மீண்டும் மீண்டும் கூறுவதன் காரணம் 'இஸ்லாமியர்கள் வெளியில் இருந்து வந்த அந்நியர்கள்' என்ற பொய்யை எல்லோர் மனதிலும் விதைக்கத்தான். இஸ்லாமியர்கள், இஸ்லாம் என்கிற மதத்தைத்தான் இறக்குமதி செய்தார்களே ஒழிய, மற்றபடி அவர்கள் இங்கு பூர்வீகமாக வாழ்ந்து வரும் இம்மண்ணை சேர்ந்த மக்களே. இஸ்லாமியர்களின் முன்னோர்களும், இங்கிருக்கும் மற்ற மதத்தவர்களின் முன்னோர்களும் வேறு வேறு கிடையாது. மற்றவர்களை போல முஸ்லிம்களும் இம்மண்ணின் உரிமையாளர்களே. வழிபாட்டை தவிர்த்து ஏனைய அனைத்திலும் இம்மண்ணோடும் மக்களோடும் இரண்டற கலந்தவர்கள். இங்கு மற்றவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறதோ, அவை அனைத்தும் இஸ்லாமியர்களுக்கும் உண்டு.

இன்று இந்தியாவில் இஸ்லாமியர்கள் எந்த நிலத்திலும் ஆட்சியை பிடிக்க முயன்று கொண்டிருக்கவில்லை. எந்த இனத்து மக்களையும் ஆதிக்கம் செய்ய துடிக்கவில்லை. மற்ற சராசரி மக்களை போலவே இங்கு வாழ்ந்து வருகின்றனர். ஆனால் (போலி) சுதந்திர இந்தியா முஸ்லிம்களை எப்படி வைத்திருக்கிறது என்பதை 'சச்சார் கமிட்டி'யின் அறிக்கை மூலமாக தெளிவாக புரிந்துகொள்ளலாம். அதாவது "பாதுகாப்பு, தொழில், பொருளாதாரம், கல்வி போன்ற அம்சங்களில் மிகவும் கீழ் நிலையில் உள்ள தலித் மக்களைக் காட்டிலும் கீழாக முஸ்லிம்கள் உள்ளனர்" என்றது. தமிழகம் போன்று தேசிய இன உணர்வு வளர்ச்சி அடைந்த தேசிய இனமாக இல்லாமல் இந்திய தேசிய மாயையில் ஊறி திளைக்கும் மாநிலங்களில் இஸ்லாமியர்கள் எந்தவித அகக் கட்டுமான வசதிகளும் அற்று, குறைந்தபட்ச வாழ்வாதார வசதிகள் கூட இல்லாமல் மிகவும் மோசமான வாழ்வையே வாழ்கின்றார்கள் .

இஸ்லாமியர்கள் தினம் தினம் தங்களின் பாதுகாப்பு, மத வழிபாடு உள்ளிட்ட அடிப்படை உரிமைகள் நசுக்கப்பட்டுக்கொண்டே கொண்டே வரும் சமூக அரசியல் சூழலில் தற்போது நின்று கொண்டிருக்கிறார்கள். அரசியலில் இஸ்லாமிய பிரதிநிதித்துவம் என்பது அறவே இல்லை என்றே கூறலாம். அரசாங்க வேலைகளில் இந்துத்துவத்திற்கு பணியாத ஆட்களை ஒழித்து கட்டுகிறார்கள். ராணுவத்தில் கூட முஸ்லிம் சிப்பாய்களை சந்தேக கண்கொண்டு பார்க்கும் சூழல்தான் உள்ளது. ராணுவத்தில் எவ்வளவுதான் தேசபக்தியாக இருந்தாலும் முஸ்லிமாக இருந்தால் உயர் பதவிக்கு செல்ல முடியாது. இதுதான் இந்த இந்திய அரசு இஸ்லாமிய மக்கள் மீது கொண்ட நம்பிக்கை. இத்தகைய சூழலில் முஸ்லிம்களுக்கு சமூக அரசியல் என்பது மிகமிகத் தேவையானது, கட்டாயமானது. "நாம் அரசியலில் தலையிடவில்லை என்றால் அரசியல் நம் வாழ்க்கையில் தலையிடும்". இம்மண்ணின் மக்களில் ஒருவர்களான இஸ்லாமியர்களை சந்தேகப்பட, அச்சுறுத்த, உரிமையை மறுக்க, ஆதிக்கம் செய்ய இங்கு யாருக்கும் உரிமை கிடையாது.

ஏன் (போலி) சுதந்திர இந்தியா இப்படி இருக்கிறது?

இந்தியா என்ற வார்த்தை அரசியல் தளத்திற்கு வருவதற்கு முன்பு வரை வரலாற்றில் இந்து, முஸ்லீம் மக்களுக்கிடையில் மதச்சண்டை என்பது நடந்ததே இல்லை என்பதை நாம் மறக்கக்கூடாது. இன்று இஸ்லாமியர்கள் மீது பின்னப்பட்டுள்ள வன்மமான அரசியல் அனைத்தும் 'இந்து மத ஒற்றுமை'க்காக திட்டமிட்டு கட்டமைக்கப்பட்டது. இதை நாம் சரியாக புரிந்துக்கொள்ள வேண்டும். எந்த காலத்திலும் இல்லாமல் ஏன் இன்று இஸ்லாமியர்கள் குறி வைக்கப்படுகிறார்கள் என்பதை தெரிந்து கொள்ள இந்திய ஆட்சியாளர்களின் வரலாற்றை கட்டாயம் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். பிரச்சனையை சரியாக புரிந்துகொண்டால்தான் அப்பிரச்சனையை நம்மால் தீர்க்க முடியும்.

இந்தியா என்கிற நாடு வரலாற்றில் என்றும் இருந்தது கிடையாது. பல நாடுகளை சிறைப்படுத்தி ஒன்றிணைத்ததுதான் இந்தியா என்கிற கட்டமைப்பு. 12ஆம் நூற்றாண்டுக்கு முன்புவரை 'இந்து' என்கிற சொல்லையே மக்கள் யாரும் கேள்விப்பட்டது கிடையாது. சுல்தானியர்களே இஸ்லாமியர்கள் அற்ற மற்ற மக்களை குறிப்பதற்கு 'இந்து' என்ற சொல்லை முதன் முதலில் பயன்படுத்தினர். ஆனால் பின்னால் ஆங்கிலேயர்கள் பல தேசங்களை சிறைப்பிடித்து ஒரு குடையின் கீழ் ஆட்சி செய்ய 'இந்து' என்கிற வார்த்தையும் 'இந்து மக்கள்' என்கிற ஓர்மையும் அவர்களுக்கு தேவைப்பட்டது. சிறுதெய்வ வழிபாடு, சமணம், சைவம், ஆசிவகம் போன்ற வழிபாட்டில் இருந்த மக்களிடம் பார்ப்பனர்களின் வர்ணாசிரம கோட்பாடு 'இந்து மதம்' என்கிற பெயரில் அனைத்து

மக்களின் மதமாக நிறுவப்பட்டது. மக்களின் உழைப்பை, செல்வங்களை ஆட்சியாளர்கள் சுரண்டுவது நீடிக்க வேண்டும் என்றால் ஒரு குடையின் கீழ் மட்டுமே ஆட்சி நடக்க வேண்டும். அதற்கு இந்து மதம் என்கிற கற்பனை இல்லாமல் சாத்தியமில்லை. மக்களை சுரண்டி வாழ ஆட்சியாளர்களுக்கும், உயர்ந்த சாதிகளுக்கும் தேவைப்பட்ட கோட்பாடு மட்டும்தான் இந்து மதம்.

19ஆம் நூற்றாண்டில் உலகம் முழுதும் எல்லா நாடுகளிலும் காலனிய ஆதிக்கத்திற்கு எதிரான தேசிய எழுச்சி ஏற்பட்டது. காலனிய ஆட்சி தூக்கி எறியப்பட்டு மண்ணின் மக்கள் ஆட்சியதிகாரத்தை கைப்பற்றினர். ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து இங்கும் எழுச்சி தொடங்கியது. ஆனால் அந்த எழுச்சியை வழிநடத்தியவர்களும் இந்து மயமாக்கப்பட்டவர்களாகவே இருந்தனர். தேசிய இன உணர்வு பெற்ற காஷ்மீர், பஞ்சாப், அஸ்ஸாம், நாகாலாந்து, தமிழகம் போன்ற நாடுகளிலும் தனிநாடு முழக்கம் தோன்றியது. “நாங்கள் இந்துக்களும் அல்ல, இந்தியர்களும் அல்ல, தமிழ்நாடு தமிழருக்கே” என்கிற முழக்கம் தமிழகத்தில் 1938லேயே ஒலித்தது. அன்று தனிநாடு முழக்கத்தை மழுங்கடிப்பதற்காக இந்து-முஸ்லீம் வெறுப்பரசியல் முதன் முதலில் தொடங்கப்பட்டது. இரண்டாம் உலகப்போருக்கு பின் தனது காலனிய ஆதிக்கத்திற்குட்பட்ட நாடுகளுக்கு விடுதலை கொடுத்தே ஆகவேண்டிய சூழலில் ஆங்கிலேயர்கள் இருந்தனர். தங்களின் சுரண்டல் தொடர்ந்து நீடிக்க அதன் அடிமையான பார்ப்பனிய, பனியா அதிகார வர்க்கத்திடம் ஆட்சியை கைமாற்றியது.

உலக பணக்காரர்கள் நம்மை சுரண்டுவது நீடிக்கவேண்டுமென்றால் அதன் அடிமையான பார்ப்பனியம் ஆள வேண்டும். பார்ப்பனியம் ஆளவேண்டும் என்றால் இந்தியா என்கிற ஓர்மை இருக்கவேண்டும். இந்தியா என்கிற ஓர்மை இருக்கவேண்டும் என்றால் தேசிய இனங்களின் தனிநாடு கிளர்ச்சி ஏற்படக்கூடாது. தேசிய இன விடுதலை உணர்வு வரக்கூடாது என்றால் இந்து என்கிற மதம் வேண்டும். இந்து மதம் நிலைக்க வேண்டும் என்றால் பொய்யாக ஒரு எதிரியை பிம்பப்படுத்தவேண்டும். அப்படி ஒரு எதிரியாக உருவாக்கப்பட்டதுதான் இஸ்லாமியர்களும், அவர்களின் மீதான வெறுப்பு அரசியலும். இந்த இந்தியா என்கிற கட்டமைப்பு முழுக்க முழுக்க உலக பணக்காரர்கள் மற்றும் உயர்ந்த சாதிகள் நம்மை சுரண்டி செழிப்பாக வாழ மட்டுமே உருவாக்கப்பட்டது.

இந்த கட்டமைப்பில் எந்த அரசியல் கட்சி ஆண்டாளும் ஏகாதிபத்தியங்கள் மற்றும் உயர்சாதிகளுக்கான ஆட்சியை மட்டும்தான் நடத்த முடியும். இந்துத்துவம் என்று சொல்லிக்கொள்கிற பிஜேபி ஆண்டாளும் சரி மதச்சார்பற்ற தேசியவாதம் என்று சொல்லிக்கொள்கிற காங்கிரஸ் ஆண்டாளும் சரி, தாழ்த்தப்பட்டவர்களின் கட்சி என்கிற பி.எஸ்.பி ஆண்டாளும் சரி, திராவிடம் என்கிற தி.மு.க ஆண்டாளும் சரி, அமைதிவழியில் சோசியலிசத்திற்கு இட்டு செல்லும் கம்யூனிஸ்ட்கள் ஆண்டாளும் சரி இந்துத்துவத்தையோ, பார்ப்பனியத்தையோ, இஸ்லாமியர்கள் மீது நடக்கும் தாக்குதலையோ யாராலும் ஒன்றும் செய்ய முடியாது. இந்திய கட்டமைப்பு இருக்கிற வரை பெரும் பணக்காரர்கள் மற்றும் உயர்சாதியினர் தவிர மற்றவர்கள் அனைவருக்கும் இது கொடுஞ்சிறைச்சாலைதான்.

இந்தியா என்கிற கட்டமைப்பில் இருந்துக்கொண்டு இங்கு மக்களுக்கான எந்த அரசியல் மாற்றத்தையும் கொண்டு வர முடியாது. இந்திய கட்டமைப்பின் அதிகாரத்தில் பங்குதாரராக துடிக்கும் காங்கிரஸ், திமுக, அதிமுக, விசிக, நா.த.க போன்ற எந்த கட்சிகளாலும் முஸ்லிம்களுக்கோ வேறு எந்த உழைக்கும் மக்களுக்கோ ஒரு போதும் பாதுகாப்பு கொடுக்க முடியாது. அவர்களால் காதில் தேனூற்றுவது போல மைக்கை பிடித்து பேச மட்டும்தான் முடியும். நடைமுறையில் அவர்களால் இங்கிருக்கும் எதையும் மாற்ற முடியாது.

சாதி ரீதியாகவோ, மத ரீதியாகவோ அணித்திரள்வதால் தீர்வு கிடைக்கும் என்று நம்பும் பலரும் இங்கு இருக்கின்றனர். ஒரு சாதியோ அல்லது ஒரு மதமோ தனித்து நின்று எவ்வளவுதான் போராடினாலும் வெற்றி கிடைத்ததில்லை என்பதுதான் காலம் நமக்கு சொல்லி கொடுத்த பாடம். அப்படி அணித்திரள்வதால் இந்திய ஆளும் வர்க்கங்களுக்குத்தான் மகிழ்ச்சி. அவர்களும் மக்கள் மத ரீதியாகவோ அல்லது சாதி ரீதியாகவோ அணிதிரள்வதைத்தான் விரும்புகிறார்கள். அதுவே இந்தியா எனும் சுரண்டல் கட்டமைப்பை காப்பதற்கான சிறந்த வழியும் கூட.

ஒரு பொதுவான மொழி, வரலாறு, பண்பாடு ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்ட ஒரு நிலத்தில் நிலைத்த மக்கள் கூட்டமே ஒரு தேசமாக வளர்ச்சி பெறும். இதுதான் உலகில் உள்ள பெரும்பாலான தேசங்கள் உருவான இயற்கையான முறையாகும். வரலாற்றுப்போக்கில் தேசிய இனமும் அதன் அதன் விடுதலை உணர்வும் இயற்கையாகவே வளரக்கூடியது, ஆனால் அவ்வளர்ச்சியை மட்டுப்படுத்தி இந்து-

இந்தியா என்று ஓர்மையை வளர்ப்பது ஒன்றே இந்திய கட்டமைப்பை காக்க வழி. போலி இந்திய தேசிய உணர்ச்சியை மீறி உண்மையான தேசிய உணர்வு வளர்ந்த தமிழகம் போன்ற தேசங்களில் இந்துத்துவத்தின் வீச்சு குறைவாக இருக்கும். இந்து-முஸ்லீம் சண்டை குறைவாக இருக்கும். எங்கெல்லாம் தேசிய இனங்கள் வளர்கிறதோ அங்கெல்லாம் ஆதிக்கவாதிகள் இந்திய தேசிய கட்டமைப்பை நிறுவ அவர்கள் கையாளும் உத்தி இந்து -முஸ்லீம் மத சண்டைதான். மத கலவரம் மூலம் போலியாக இந்து மத வெறியூட்டி இந்திய கட்டமைப்பை காப்பதே அவர்களுக்கு வழி.

தமிழகம் எப்பொழுதுமே தமிழ்த்தேசிய உணர்வு பெற்ற தேசமாக இருப்பதால் இங்கு இந்துத்துவம், இந்தியா என்கிற போலி உணர்ச்சி என்றுமே மக்களிடம் வெல்லாது. அதனால்தான் தமிழக முஸ்லிம்கள் வட இந்தியாவை காட்டிலும் மிகவும் பாதுகாப்பாக உள்ளனர். இந்து- முஸ்லீம் சண்டை இல்லாததால்தான் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் எழுச்சி இங்கு இருக்கிறது. எங்கெல்லாம் போலி இந்திய உணர்ச்சி இருக்கிறதோ அங்கெல்லாம் இந்து -முஸ்லீம் சண்டை கட்டாயம் அதிகம் இருக்கும். இந்து முஸ்லீம் சண்டை இருக்குமிடத்தில் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் எழுச்சி இருக்காது. தனி தேசியம் கோரும் தமிழகம், பஞ்சாப், அசாம், மணிப்பூர், மிசோரம் போன்ற தேசங்களில் இந்து முஸ்லீம் சண்டை இருக்காது.

தேசிய இன வளர்ச்சியின் அடுத்த கட்டம் இந்திய கட்டமைப்பு தகர்வதுதான் என்பதை கண்டு அஞ்சி இந்திய ஆளும் வர்க்கம் தமிழகம் உட்பட தேசிய இன உணர்வு பெற்ற தேசங்களை காவிமயமாக்கும் முயற்சியில் முழு வீச்சாக இன்று இறங்கி இருக்கிறது. சுரண்டல் இந்தியாவை காக்க வேண்டும் என்றால் தொடர்ந்து மதப் பிரச்னை செய்து கொண்டே இருக்க வேண்டும். இன்று குடியுரிமை திருத்த சட்டம், நேற்று பாபர் மசூதி, முத்தலாக் விவகாரம் நாளை பொது சிவில் சட்டம் நாளை மறுநாள் வேறொன்று இது தொடரும். இந்த பிரச்சனைகளில் எல்லாம் இந்துத்துவவாதிகளுக்கு ஒரு லாபமும் கிடையாது. ஆனால் இது போன்ற முஸ்லிம்களுக்கு எதிராக பிரச்சனைகளை செய்துகொண்டே இருக்க வேண்டும். அதுவே இந்து மதத்தையும் இந்தியாவையும் காக்கும் வழி. தமிழகத்தின் தேசிய இன வளர்ச்சி அடுத்த கட்டத்திற்கு சென்றுவிட கூடாது என்று தமிழகத்தில் மத கலவரம் செய்ய துடித்துக் கொண்டிருக்கிறது இந்திய ஆளும் வர்க்கம். அவர்களின் எண்ணம் தமிழினத்தில் இந்து -முஸ்லீம் கலவரம் நடத்தி இஸ்லாமியர்களை தனிமைப்படுத்தி போலி இந்து ஓர்மை ஏற்படுத்தி இந்திய கட்டமைப்பை காப்பதுதான். ஆனால் தமிழ்த்தேசிய போராட்ட அரசியலில் தமிழர்கள் மதமற்று தேசிய இனமாக அணிதிரள்வதுதான் இன்றுவரையான இந்துத்துவவாதிகளின் தோல்விக்கு காரணம்.

வரலாற்று கட்டத்தின்படி எப்படி மன்னர் ஆட்சிமுறை ஒழிந்தது தவிர்க்க முடியாததோ, அதுபோல போலி இந்தியா என்பது பல நாடுகளாக உடைந்து தேசிய இனங்கள் தனிநாடு விடுதலையை அடைந்தே தீரும் என்பது வரலாற்றில் தவிர்க்க முடியாத நியதி. அன்றுதான் இந்த போலி இந்து மதம், இந்துத்துவம், பார்ப்பனியம் ஒழியும். ஆனால் அது தானாக நடக்காது, தமிழகம், நாகா, அஸ்ஸாமி போன்ற தேசிய வளர்ச்சி பெற்ற நம்மை போன்ற தேசிய இன மக்கள்தான் நடத்த வேண்டும். உண்மையான தேச விடுதலை போராட்டத்தை நாம்தான் நடத்த வேண்டும். இதனால்தான் அயோத்திதாசர், பெரியார், மறைமலைஅடிகள், சோமசுந்தர பாரதி போன்றவர்கள் 1938 லேயே தனிநாடு கோரிக்கையை முன்வைத்தனர். தோழர் தமிழரசன் உழைக்கும் மக்களை முன்வைத்து தமிழ்நாடு விடுதலைக்கு போராடினார். பழனிபாபா போன்றவர்கள் துணிச்சலாக பல மேடைகளில் தனித்தமிழ்நாட்டை வலியுறுத்தினர். தமிழ்த்தேசியம் என்பது இயற்கையில் வளரக்கூடியது. அதை தடுக்க முடியாது. வளர்ந்து வரும் தமிழ்த் தேசிய அரசியலை வலுவாக்கி இந்திய ஆளும் வர்க்கம், இந்துத்துவவாதிகள், உலக பணக்காரர்கள் ஆகியவர்களிடம் இருந்து அனைத்து தேசிய இன மக்களும் முழு விடுதலை பெறுவோம். இந்தியாவால் அல்லல்படும் தமிழக மற்றும் வடநாட்டு முஸ்லிம்களின் விடுதலையும், பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலையும் தேசிய இன விடுதலையில் மட்டும்தான் இருக்கிறது.

-தோழர் முகமது ஷாஜகான்

தேசிய இன விடுதலையை வென்றெடுப்போம்!

அனைத்து மக்களும் விடுதலை பெறுவோம்!!

முத்துக்குமரனின் நினைவு நாள்!
முத்துக்குமரனின் தியாகம் வீண்போகாதிருக்க
தமிழக இளைஞர்களே விழித்தெழுவீர்!!



தமிழின அழிப்புப் போரை சிங்கள இனவாத இலங்கை அரசு நடத்திக்கொண்டிருந்தது. போரென்றால் சாதாரண போரல்ல, போர் நெறிமுறைகள யெல்லாம் மீறி உலக நாடுகளால் தடைசெய்யப்பட்ட ஆயுதங்களை பயன்படுத்தி ஈழத்தமிழ் மக்களை கொன்று குவித்துக் கொண்டிருந்தது இனவெறி பிடித்த சிங்கள இராணுவம்.

அத்தகைய கொடுமையான போர் ஈழத்தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்டதை கண்டு கொதிப்படையாமலும், போரை தடுத்து நிறுத்திட நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளாமலும் முடங்கிக் கிடந்த தமிழ்நாட்டு மக்களின் நிலைகண்டு வேதனையுற்றார் முத்துக்குமரன். தமிழ்நாட்டு தமிழர்களுக்கு விழிப்புணர்வூட்ட விரும்பினார் முத்துக்குமரன். விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக முத்துக்குமரன் தீக்குளித்து தன்னுயிர் ஈந்தார். முத்துக்குமரன் தீக்குளித்ததைக் கண்டவுடன் தமிழகமே கொந்தளித்து எழுந்தது. தமிழ்நாட்டு தமிழர்கள் மட்டுமா! உலகெங்கும் உள்ள தமிழர்கள் எல்லாம் விழித்துக்கொண்டனர். வீறுகொண்டு எழுந்தனர். முத்துகுமரனின் தியாகம் வீண்போகவில்லை. அவர் எதிர்பார்த்தது நடந்தது.

"இலங்கை அரசே தமிழின அழிப்புப்போரை உடனே நிறுத்து!

இந்திய அரசே சிங்கள இனவாத இலங்கை அரசு நடத்திக்கொண்டிருக்கும் தமிழின அழிப்புப்போரை உடனடியாக நிறுத்து!

உலக நாடுகளே சிங்கள இனவாத இலங்கை அரசு நடத்திக்கொண்டிருக்கும் தமிழின அழிப்புப் போரில் தலையிட்டு ஈழத்தமிழர்களை காப்பாற்றுங்கள்!"

இவ்வாறான முழக்கங்கள் உலகத்தமிழர்களால் முழங்கப்பட்டு உலகெங்கணும் எதிரொலித்தது. போரை இடைநிறுத்தக் கோரி பல்வேறு நாடுகளிலும், பல்வேறு கட்டங்களாக, பலவகையான போராட்டங்கள் உலகத்தமிழர்களால் நடத்தப்பட்டது. போராட்டங்களின் விளைவாக உலக மக்களின் கவனமெல்லாம் ஈழத்தமிழர்களின் பால் திரும்பியது.

‘ தமிழ்நாட்டில் போராட்டங்கள் வெடித்ததால் மத்திய அரசின் கவனம் தமிழ்நாட்டின் மீது திரும்பும். தமிழர்களின் குரலுக்கு மத்திய செவி மடுக்கும். தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து இந்திய அரசு இலங்கை போரில் தலையிட்டு போர் தொடர்வதை தடுத்து நிறுத்திவிடும்.’ என தமிழ்நாட்டு மக்கள் வெகுவாக நம்பினார்கள். இந்திய அரசு நினைத்திருந்தால் போர் இடையிலேயே நிறுத்தப்பட்டிருக்கும். இந்திய அரசு அதை செய்யவில்லை. போர் நிறுத்தப்படாமல் தொடர்ந்து இறுதிக்கட்ட அழிவுவரை நடந்தேறியது. ஈழத்தமிழர்கள் பேரழிவை சந்தித்தனர்.

“ஈழத்தமிழர்களுக்கு ஒரே தீர்வு தனித் தமிழீழம் தான்” என்ற முழக்கம் அடங்கும்வரை, அடக்கப்படும் வரை போர் நீடித்தது என்பது பெரும் கொடுமை. எல்லாம் முடிந்து போனது. போர் நிறுத்தப்படவேண்டும் என்று தமிழ்நாட்டு மக்கள் நடத்திய போராட்டங்களுக்கும் எவ்வித பலனும் கிடைக்காமல் வீணானது, வேதனையானது.

தமிழ்நாட்டில் போராட்டங்கள் நடந்தால் அதுகண்டு மத்திய அரசு தலையிட்டு போரை நிறுத்திவிடும் என்று தமிழக மக்கள் நம்பினார்களேஅவ்வாறு நடைபெறவில்லையே ஏன்?

இந்திய அரசு தலையிட்டு போரை நிறுத்தவில்லை என்பது மட்டுமில்லாமல், ஈழத்தமிழர்களை அழித்துக்கொண்டிருக்கும், சிங்கள இனவாத இலங்கை அரசின் இன அழிப்புப் போருக்கு துணையும் அல்லவே போனது. இந்திய அரசு, ‘இலங்கைக்கு ஆயுதங்களை அள்ளி வழங்கியது. சிங்கள இராணுவத்திற்கு பயிற்சியளித்து, இராணுவ, தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கியது. ஆலோசகர்களை அனுப்பியது’ என துணைபோனது மட்டுமில்லாமல், மொத்தத்தில் இன அழிப்புப்போரை வழிநடத்தியது இந்திய அரசு தான் என்றால் அது மிகையல்ல.

தமிழினத்து மக்களின் குரலுக்கு செவி சாய்க்காது மத்திய அரசால் இருக்க முடிந்தது எப்படி?

தமிழ்நாட்டில் நடந்த போராட்டங்களை கண்டு கலக்கமடையாமல் மத்திய அரசால் இருக்க முடிந்தது எப்படி?

தமிழ்நாட்டு மக்களை கண்டு பயந்து நடுங்காமல் மத்திய அரசால் இருக்க முடிந்தது எப்படி?

தமிழ்நாட்டில் மக்கள் போராட்டங்கள் நடந்ததாக காட்டிக்கொள்ளாமல் தமிழ் நட்டு மக்களின் அலட்சியப்படுத்திவிட்டு, அலட்டிக்கொள்ளாமல் எந்த தைரியத்தில் இந்திய அரசு இன அழிப்புப் போருக்கு துணைபோனது?

தமிழக தலைவர்களின் கடந்த கால வரலாற்றில் இருந்துஅவர்கள் மீது ஒரு மதிப்பீட்டை இந்திய அரசு வைத்துள்ளது. அதாவது ‘தமிழ்நாட்டில் எவ்வளவு காலம் தான் போராடினாலும், எப்படித்தான் போராடினாலும் தமிழக தலைவர்களோ மக்களின் போராட்டங்களை மழுங்கடித்து, பிசுபிசுக்கவைத்து, நீர்த்துபோகச் செய்துவிடுவார்கள்.’ தமிழகத் தலைவர்கள் பற்றிய இந்திய அரசின் மதிப்பீடு இவ்வாறாகத்தான் உள்ளது. அதனால், “தமிழ்நாட்டில் மக்கள் நடத்தும் போராட்டங்களை தமிழகத் தலைவர்களே பார்த்துக்கொள்வர்கள். அதுபற்றி நாம் கவலைப்பட எதுவுமில்லை” என இந்திய அரசு கருதியது. அதன் காரணமாகவே தமிழ்நாட்டில் போரைத் தடுத்து நிறுத்தக்கோரி நடத்தப்பட்ட மக்களின் போராட்டங்களை கண்டுகொள்ளாது இந்திய அரசு, இலங்கை அரசுக்கு உதவியது. மத்திய அரசின் கணிப்புக்கு ஏற்பவே தமிழகத் தலைவர்கள் நடந்துகொண்டார்கள்.

முத்துக்குமரனின் தீக்குளிப்பை தொடர்ந்து தமிழ்நாட்டுத் தமிழர்கள் விழிப்படைந்து இலங்கை அரசின் இன அழிப்புப்போரை இந்திய அரசு தடுத்து நிறுத்திட வேண்டுமென்று கோரி போராட்டங்களை நடத்தத் தொடங்கிவிட்டனர். தமிழ் மக்களின் தன்னெழுச்சியான போராட்டங்களை கண்டவுடன் தமிழகத் தலைவர்கள், எங்கே தமது தலைமைகள் பறிபோய்விடுமோ? என்று அஞ்சி அலறியடித்துக்கொண்டு, ஒருவருடன் ஒருவர் போட்டிபோட்டுக்கொண்டு போராட்டங்களுக்கு தலைமை ஏற்க ஓடோடி வந்தனர். அவ்விதம் வந்த தலைவர்களை அப்பாவி மக்களும் நம்பிவிட்டனர். ஆனால் தலைவர்களோ போராட்டங்களின் தன்மையையே மாற்றி, போராட்டக்குணத்தை மழுங்கடித்து, போராட்டங்களை பிசுபிசுக்க வைத்து, போராட்டங்களின் விளைவை நீர்த்து போகச் செய்துவிட்டனர். இந்திய அரசுக்கு சாதகமான நிலையை ஏற்படுத்திவிட்டனர். அவ்வாறாக

செயல்பட்டதில் தமிழக ஆளுங்கட்சியின் தலைவர்கள் உட்பட எதிர்க்கட்சியின் தலைவர்கள் வரை, பெரியக்கட்சியின் தலைவர்கள் முதல் சிறிய கட்சியின் தலைவர்கள் வரை பல தலைவர்களும் உண்டு.

இன அழிப்பு போர் இடையில் தடுத்து நிறுத்தப்படாததால் இறுதிவரை ஈழத்தமிழர்களுக்கு பேரழிவுகளை ஏற்படுத்திவிட்டு ஓய்ந்துள்ளது.

இந்த நிலையில் சிலர் கூறுகின்றனர். "கருணாநிதி போரைத் தடுத்து நிறுத்த மத்திய அரசை நிர்பந்திக்காமல், தமது பதவியை காப்பற்றிக்கொள்வதிலேயே கவனமாக இருந்துவிட்டார். அவ்வகையில் ஈழத்தமிழர்களுக்கு துரோகம் இழைத்துவிட்டார். தமிழினத்திற்கு துரோகியாகிவிட்டார்." எனக் கூறுகின்றனர். கருணாநிதி இப்போதுதான் தமிழின துரோகியாகிவிட்டார் என்பதில்லை, கடந்த ஐம்பது ஆண்டுகாலமாக தமிழ் இனத் துரோகியாகவே இருந்து வந்துள்ளார். இவ்வளவு காலமும் சாமர்த்தியமாக மூடி மறைத்து தமிழர்களை ஏமாற்றி வந்துள்ளார். இப்போதுதான் மூடி மறைக்க முடியாமல் அம்பலப்பட்டுள்ளார்.

கருணாநிதி தமிழ் இனத் துரோகிதான் சரி ஆனால், கருணாநிதியை துரோகி என கூறும் இவர்கள் என்ன செய்தார்கள்? கருணாநிதி செய்யாததை, செய்யத் தவறியதை, செய்ய வேண்டியதை மற்றவர்கள் செய்தார்களா?இல்லையே. கருணாநிதி சொன்னதைபோல் "எனது ஆட்சியை கலைக்க செய்துவிட்டு அவர்கள் ஆட்சியை பிடிக்க எத்தனிக்கிறார்கள்" என்றாரே அதுபோலதான் எதிர்க்கட்சி ஜெயலலிதாவும் அவரது கூட்டணிக்கட்சி தலைவர்களும் செயல்பட்டுள்ளனர். பதவியை காப்பாற்றிக் கொள்வதற்காகவும், பதவியை பிடிப்பதற்காகவும், தமிழ் இனத்திற்கு துரோகம் இழைக்கலாம் தவறில்லை என்றல்லவா ஆளுங்கட்சி தலைவர்களும், எதிர்க்கட்சியின் தலைவர்களும் செயல்பட்டு வருகின்றனர்.

அந்த தலைவர்கள்தான் அப்படி என்றால் நூற்றுக்கணக்கில் இருக்கும் சிறுசிறு இயக்கங்களின் தலைவர்கள்தான் புதியதாய் என்ன செய்துவிட்டார்கள்?

ஒன்றுமில்லையே. "நாமே அடிமைகள் நம்மால் எப்படி இன்னொரு அடிமைக்கு உதவிட முடியும்" என்று பெரியார் எப்போதோ சொன்ன ஒரு வாக்கியத்தை பிடித்துக்கொண்டு "நம்மால் இதற்குமேல் என்ன செய்ய முடியும்" என்றுதானே அனைத்து தலைவர்களும் செயலாற்றுகின்றனர். நாமே அடிமைகள் என்பது உண்மைதான். நமது அடிமை நிலை நீடிக்கும்வரை நம்மால் சரியாக ஈழத்தமிழர்களுக்கு உதவிட முடியாது என்பதும் உண்மைதான் . அதற்காக சும்மா இருந்து விடலாமா? நமது அடிமை நிலை ஒழிய வழி என்ன? ஈழத்தமிழர்களுக்கு உதவிட நமக்குள்ள வழி என்ன? என்பதை கண்டறிய வேண்டாமா?

மாற்று வழியை கண்டறிய வேண்டாமா? மாற்று வழியைக் கண்டறியாமல் இதற்கு மேல் நம்மால் என்ன செய்ய முடியும்? என்று ஒதுங்கி போவது, ஒளிந்துக்கொள்வது, கோழைத்தனமல்லவா?

முத்துகுமரா ஈழத்தின் கதி இவ்வாறு முடிந்திட தமிழகத் தலைவர்களே காரணம் என்பதை நீ முன்கூட்டியே உணர்ந்திருப்பாயானால்,' தீ குளிப்பு போராட்டத்திற்கு' பதிலாக மாற்று வழியை தேர்ந்தெடுத்திருப்பாயே! ஆம் நிச்சயமாக!

முத்துகுமரனின் கனவை நினைவாக்கிட, தமிழீழம் மலர, தமிழ்நாட்டு மக்கள் துணை நிற்க, எதிர்கால தமிழ் இளைஞர்கள் மாற்று வழியை, தமிழகத்தை மாற்றும் வழியை, தலைகீழாக மாற்றும் வழியையே தேர்ந்தெடுப்பார்கள்.

முத்துக்குமரா, உன் தியாகம் வீண் போகாது. தமிழ் ஈழம் அமைத்திட போராட போகும் ஈழத்தமிழர்களுக்கு துணையாக தமிழ்நாட்டு மக்கள் இருப்பார்கள். நிச்சயமாக முத்துக்குமரா தமிழினம் உள்ளவரை உன் நினைவு நிலைத்து நிற்கும்.

முத்துக்குமரனின் புகழ் நீடூழி வாழ்க!

தோழர் சு (எ) சுந்தரம்

29-10-2010.

குறிப்பு:

இக்கட்டுரை தோழர் சுந்தரம் அவர்களால் எழுதப்பட்டு தியாகி முத்துக்குமரன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளில் (29-01-2010) செந்தமிழகம் படிப்பு வட்டத்தின் பெயரில் வெளியிடப்பட்டது.

கீழ்வெண்மணி தியாகிகள் நினைவை நெஞ்சில் ஏந்துவோம்..!

இந்திய அதிகார மாற்றத்திற்கு பிறகு தமிழ்நாட்டில் நடந்த வர்க்கப் போராட்டங்களில் முதன்மையானது கீழ்வெண்மணி போராட்டமாகும். கீழ்வெண்மணி படுகொலை நடந்து முடிந்து அரை நூற்றாண்டைக் கடந்த பின்பும் உழைக்கும் மக்களின் உள்ளங்களில் தீயாய் கனன்று கொண்டிருக்கிறது.

காலங்காலமாக உழைக்கும் மக்களின் உழைப்பைச் சுரண்டி கெட்டித் தட்டிப் போன நிலப்பிரபுத்துவத்தின் வேர்களை அறுக்கப் போராடிய விவசாய கூலிகளை ஒடுக்குவதற்காக 44 தாழ்த்தப்பட்ட அப்பாவி மக்கள் ஒரே குடிசையில் வைத்து உயிரோடு கொளுத்தப்பட்ட கொடுமையும் இந்த தமிழ்த்திரு நாட்டில் தான் நடந்தது.

“சோழ நாடு சோறுடைத்து” என்று பெருமையோடு கூறப்படும் இம்மண்ணில் தான் கூலிக்கேட்டு போராடிய மக்களும் குடிசையோடு கொளுத்தப்பட்ட கொடுமைகளும் அரங்கேறியது.

நிலப்பிரபுக்களின் சாணிப்பால், சவுக்கடி உள்ளிட்ட கொடுமைகளுக்கு ஆளான உழவர்கள் தோழர் சீனிவாசராவ் உள்ளிட்ட தோழர்களின் முயற்சியால் செங்கொடியின் கீழ் ஒருங்கிணைந்து நிலப்பரப்புக்களுக்கு எதிராகப் போராடினர்.

உழைக்கும் மக்கள் ஒன்றிணைவதை கண்ட பண்ணையார்கள் கருப்பையா மூப்பனாரின் வழிகாட்டுதலில் கோபாலகிருஷ்ண நாயுடுவின் தலைமையில் நெல் உற்பத்தியாளர்கள் சங்கத்தை கட்டியமைத்தனர். தங்களது நிலங்களில் வேலை செய்வதற்காக இராமநாதபுரத்திலிருந்து இடைநிலை சாதிகளை சேர்ந்த உழவர்களை கீழத்தஞ்சையில் குடியமர்த்தினர். கீழத்தஞ்சையில் அன்றைய காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட முக்கிய கட்சிகளின் தலைமைகளாகவும் இந்த நெல் உற்பத்தியாளர்கள் சங்கத்தினரே அமர்ந்திருந்தனர்.

தெலுங்கானா விவசாயிகள் போன்று கீழத்தஞ்சையின் விவசாயிகள் ‘உழுபவனுக்கே நிலம் சொந்தம்’ என்று போராடவில்லை என்றாலும் அவர்களின் போராட்டத்தை வெறும் கூலி உயர்வு போராட்டமாக மட்டுமே கருதிவிட முடியாது. அப்போது விவசாயிகளின் போராட்டத்தின் முக்கிய தலைமையாக விளங்கிய அ.கோ.கஸ்தூரிரங்கன் அப்போராட்டத்தை பற்றி கூறும்போது “கூலி உயர்வு போராட்டம் மட்டுமல்ல, விவசாயத் தொழிலாளர்கள் மரியாதையும், உரிமையும் பெறுவதற்காக நடத்திய போராட்டந்தான் அது. 5 படி நெல் கூலியை 6 படியாக உயர்திக் கொடுக்கணும். அறுவடை செஞ்ச நெல் அனைத்துக்கும் கூலி தரணும்னு இரண்டு கோரிக்கைகள். நெல் அறுவடை முடிந்து களத்தில் நெல் குவிக்கப்படும். ஏறத்தாழ பாதிக்கு மேல் மூட்டை போட்ட பிறகு வண்ணான், பரியாரி,கோவிலுக்கு - கிராமத்துக்குன்னு பண்ணையார் அளந்து போடச் சொல்வார். இந்த வருஷ சம்பளத்தின் மூலமும், பராமரிப்பின் மூலமுந்தான் கிராம சாதிப் படிநிலை,

சேவை செய்கிற சாதி முறைகள், நில உடைமை முறையை உயிரூட்டி வச்சிகிட்டாங்க. இந்த முறையில் நெல் விநியோகிச்ச பிறகு அறுவடையான மிச்ச நெல்லுக்குத்தான் கூலி கணக்கிடுவார்கள். இப்படி கூலி போடும்போது முதல்ல அளந்து கட்டின பாதிக்குதான் கூலி கிடைக்கும். மீதி களத்தில் செலவாகும் நெல்லுக்கு கூலி கிடையாது. களத்திலே செலவாகும் நெல்லும் கூலிக்கு அறுத்ததுதானே? அதோட களத்தில் செலவெல்லாம் முடிஞ்சு ஒவ்வொரு குவியல்லேயும் ஒன்றரை களம், இரண்டு களம் நெல்லு கிடைக்கும். இதை அடிபொடின்னு சொல்லி அதையும் கூலி கொடுக்காம அள்ளிப் போட்டுக்குவான். என்னன்னு கேட்டா அது பட்டறைக் காய்ச்சலுக்குன்னு சொல்லிடுவான். நமது கோரிக்கை என்னன்னா அறுவடை செய்த அனைத்து நெல்லையும் மூட்டை போட்டு அத்தனை மூட்டைக்கும் கூலி போடவேண்டும் என்பதுதான். ரெண்டு கோரிக்கைகள்ல கூலியை உயர்த்தி கொடுக்க சம்மதித்த பண்ணைகள் அறுவடை செஞ்ச நெல் அனைத்துக்கும் கூலி என்பதை மறுத்துவிட்டனர். இதுவரை இருந்த பாரம்பரிய முறையை மாற்றுவது தங்கள் கௌரவத்தைப் பாதிப்பதாகக் கருதி மறுத்தனர். செய்த வேலை முழுமைக்கும் கூலி பெறுவது தங்களின் மரியாதைக்கும், உரிமைக்கும் கிடைக்கும் அங்கீகாரமாகத் தொழிலாளர்கள் முடிவு செய்தனர். இதுதான் வெண்மணிப் போராட்டத்தின் அடிப்படை" என்கிறார்.

இப்படியாக காலங்காலமாக நிலவி வந்த நிலப்பிரபுத்துவ விவசாய உற்பத்தி முறையை மாற்றியமைக்கும் போரட்டத்தையே அன்றைய விவசாய சங்க தோழர்கள் முன்னெடுத்தனர். இதுபோன்ற நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையின் மீது கைவைத்ததால் மற்ற இடைநிலை சாதிகளையும் தன்பக்கம் இணைத்துக்கொண்டு தாழ்த்தப்பட்ட உழைக்கும் மக்களை நிலப்பிரபுக்கள் தாக்கினர். டிசம்பர் 25,1968ல் கீழ்வெண்மணிக்குள் நுழைந்த பண்ணையார்களும் அவர்களது அடியாட்களும் காவல்துறையின் (கிசான் போலீஸ்) ஏக ஆதரவோடு அங்கிருந்த மக்களின் மீது துப்பாக்கி சூடு நடத்தினர். நிலப்பிரபுக்களின் துப்பாக்கி சூட்டிற்கு அஞ்சி தப்பியோடிய பெண்களும், குழந்தைகளும் பாதுகாப்பிற்காக அங்கிருந்த குடிசைக்குள் நுழைந்து தாழிட்டுக்கொண்டனர். குழந்தைகள் பெண்கள் என்று கூட பாராமல், அக்குடிசையை பூட்டி தீயிட்டனர் நிலப்பிரபுக்கள். இதில் 44 அப்பாவி மக்கள் உயிரிழந்தனர். இதற்கு எதிராக தொழிலாளர்களும், சமூக செயல்பாட்டாளர்களும் குரல்கொடுக்கவே கோபாலகிருஷ்ண நாயுடு உள்ளிட்ட குற்றவாளிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. இம்மாதிரியான ஆளும் வர்க்கத்தை காப்பதற்காகவே உருவாக்கப்பட்ட அரசின் நீதிமன்றம் கோபாலகிருஷ்ண நாயுடு உள்ளிட்ட அனைத்து குற்றவாளிகளும் நிரபராதிகள் என தீர்ப்பளித்து விடுதலை செய்தது.

அரைக் காலனிய அரை நிலப்பிரபுத்துவ நாடுகளில் முதலாளி வர்க்கம், உழைக்கும் வர்க்கத்துக்கு அஞ்சி நிலப்பிரபுத்துவதுடன் சமரசம் செய்து கொள்ளும் என்பதற்கு கீழ்வெண்மணியே சாட்சி.

ஆளும் வர்க்கத்தை காக்கும் கருவியான நீதி மன்றங்கள் தான் இப்படி செய்ததென்றால் அன்று இருந்த ஆகச் சிறந்த புரட்சியாளர்களான கல்விக்கண் திறந்த கர்ம வீரர்களும், உலகம் போற்றும் அறிஞர்களும், பகுத்தறிவு பகலவர்களும் கூட தங்களது வர்க்க நிலைமைகளை அப்பட்டமாக வெளிக்காட்டினர். அரைக் காலனிய அரை நிலப்பிரபுத்துவ நாடுகளில் முதலாளி வர்க்கம், உழைக்கும் வர்க்கத்துக்கு அஞ்சி நிலப்பிரபுத்துவதுடன் சமரசம் செய்து கொள்ளும் என்பதற்கு கீழ்வெண்மணியே சாட்சி. 12 ஆண்டுகளுக்கு பின்னர் கோபாலகிருஷ்ண நாயுடு இந்திய பொதுவுடைமைக் கட்சி (மா.லெ) விடுதலை தோழர்களால் வெட்டிக் கொல்லப்பட்டான். தோழர்கள் நிலப்பிரபுவை வெட்டிக் கொன்றாலும் இன்றுவரை இப்பகுதிகளில் நிலப்பிரபுத்துவம் நீடித்துக் கொண்டுதான் இருக்கிறது. அன்று நிலப்பிரபுக்களின் நேரடி சொத்துக்களாய் இருந்த விவசாய நிலங்கள் இன்று எஸ்டேட்டுகளாகவும், டிரஸ்ட்களின் சொத்துக்களாகவும் மாறி இருக்கின்றன. இவை போதாதென்று காலங்காலமாக நீடித்துவரும் மத வழியான நிலப்பிரபுத்துவமான ஆதீனங்களிடமும், கோவில்களிடமும் ஏராளமான நிலங்கள் தேங்கி நிற்கின்றன. அன்று நம் முன்னோர்கள் செய்யாமல் விட்டுச் சென்ற நிலப்பிரபுத்துவத்தை அழித்தொழிக்கும் பணியையும், உழவர்களுக்கே நிலத்தை சொந்தமாகும் பணியையும் அடுத்த தலைமுறையினரான நாம்தான் செய்ய வேண்டும்.

தோழர் இரா.திலீபன்

உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்!

சோசலிச நெறி

தமிழ்த் தேசியம்

புதிய சனநாயகம்

உழவர் திட்டம்

புதிய சமூக நீதி

தேசிய இனங்களின் விடுதலை வெல்க!!

டிசம்பர்–25

வர்க்கப் போரில் உயிர் நீத்த

கீழ்வெண்மணி தியாகிகளுக்கு

செவ்வணக்கம்

★ நிலப்பிரபுத்துவத்தையும், சாதியாதிக்கத்தையும் வேரோடு அழித்தொழிப்போம்.

★ உழுபவர்களுக்கே நிலத்தை சொந்தமாக்குவோம்.

★ பாட்டாளி வர்க்கத் தலைமையில் அனைத்து புரட்சிகர வர்க்கங்களை ஒருங்கிணைத்து தமிழ்த்தேச விடுதலையை வென்றெடுப்போம்.

தமிழ்த் தேசியப் பாதுகாப்பு இயக்கம்

95247 09860 tnpmov tnsenkodi.blogspot.com

உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்!

சோசலிச நெறி

தமிழ்த் தேசியம்

புதிய சனநாயகம்

உழவர் திட்டம்

புதிய சமூக நீதி

தேசிய இனங்களின் விடுதலை வெல்க!!

இந்திய அரசே,

- ★ **மக்களை மதரீதியாக பிளவுபடுத்தும் குடியுரிமை திருத்தச் சட்டத்தை திரும்பப் பெறு.**
- ★ **குடியுரிமை வழங்குவதற்கான அதிகாரத்தை மாநில (தேசிய இன) அரசுகளுக்கே வழங்கிடு.**
- ★ **தமிழ்நாட்டில் அகதிகளாக குடியேறிய ஈழத் தமிழர்களுக்கும் மலையக தமிழர்களுக்கும் குடியுரிமையை வழங்கிடு.**

தமிழ்த் தேச மக்களே,

- ★ **பாசிச இந்திய அரசை எதிர்த்து போராடுவோம்.**
- ★ **இந்து ராஷ்டிர கனவை தகர்த்தெறிவோம்.**
- ★ **தமிழ்த்தேச விடுதலையை வென்றெடுப்போம்.**

தமிழ்த் தேசியப் பாதுகாப்பு இயக்கம்

📞 95247 09860 f tnpmov 🌐 tnsenkodi.blogspot.com